மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சாத்தூர்.

முன்னிலை :– திருமதி.P.அனுராதா, B.A., B.L.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி மற்றும்
நீதித்துறை நடுவர் எண்.1, சாத்தூர்.

2024 ம் ஆண்டு மார்ச் திங்கள் 18 ம் நாள் திங்கட்கிழமை

இ.மஎண்.06/2023
உள்
அசல் வழக்கு எண்.99/2015
––––––––

வட்டாட்சியர் பா.முத்துபாண்டீஸ்வரி
வெம்பக்கோட்டை ... மனுதாரர்/2 ம் பிரதிவாதி

/எதிர்/

சுப்புராஜ் ... எதிர்மனுதாரர்/வாதி

இந்த மனு 07.09.2023 ம் தேதி இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு என் முன்பு 26.02.2024–ம் தேதி இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்/2 ம் பிரதிவாதி தரப்பில் அரசு வழக்கறிஞர் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.M.மைக்கேல்பாரதி அவர்கள் ஆஜராகியும், மனுதாரர் தரப்பு மனுவுரை மற்றும் எதிர்மனுதாரர் தரப்பு எதிருரையை நன்கு கேட்டறிந்தும், சாட்சிய சான்றாவணங்களை நன்கு பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும் . . .

<u>**உத்தரவு**</u>

இம்மனுவானது உரிமையியல் நடைமுறைச்சட்டம் பிரிவு 151 ன் கீழ் இம்மனுவினை ஏற்று அபிடவிட்டில் கண்டுள்ள காரணங்களினால், அசல் வழக்கினை மறுதிறப்பு செய்து வழக்கினை விசாரணைக்கு ஏற்க உத்தரவிடக்கோரி 06.09.2023 ம் தேதி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) <u>**மனுதாரர்/2 ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள அபிடவிட்டு சுருக்கம்:–**</u>

வழக்கானது வாதிகள் தரப்பில் சாட்சிய விசாரணை விசாரிக்கப்பட்டு பிரதிவாதிகள் தரப்பில் சாட்சியம் இல்லை என்று தெரிவிக்கப்பட்டு அசல் வழக்கானது வாதுரைக்காக வாய்தா ஏற்பட்டுள்ளது. இந்த நிலையில் வாதிகள் தரப்பு வாதுரையின்

போது மனுதாரர் தரப்பில் ஆவணங்கள் தாக்கல் செய்ய நீதிமன்றம் கோரியதன் பேரில் மனுவில் கண்ட ஆவணத்தை மனுதாரர் தரப்பு ஆவணமாக குறியீடு செய்ய மறுதிறப்பு செய்ய அனுமதித்து உத்தரவாக வேண்டியது நீதியின் பொருட்டு அவசியமாயும், நியாயமாயும் உள்ளது. இல்லாதுபோனால் மனுதாரருக்கு அனேக இன்னலும், இழப்பும் ஏற்படக்கூடியதாக உள்ளது. எனவே, மனுதாரர் தரப்பில் தற்பாது தாக்கல் செய்யும் மனுவில் கண்ட ஆவணத்தை மனுதாரர்தரப்பு ஆவணமாக குறியீடு செய்ய அனுமதித்து உத்தரவிடக்கோரி மனு தாக்கல் செய்து வாதிடப்பட்டது.

3) **<u>எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரை சுருக்கம்</u>**:-

மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனு சட்டப்படிக்கும், நியாயப்படிக்கும் நிலைநிற்கத்தக்கதல்ல. எடுத்த எடுப்பிலேயே தள்ளுபடி செய்யப்பட வேண்டிய ஒன்றாகும். மனுதாரர்கள் மனுவிற்கு ஆதரவாக தாக்கல் செய்யப்பட்டள்ள அபிடவிட் ஆனது சிஆர்பி பிரிவு 37ல் கூறியுள்ளவற்றிற்கு முற்றிலும் விரோமாக உள்ளதால் அதனை ஏற்றுக்கொள்ள முடியாது. எனவே, மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவினை தள்ளுபடி செய்து உத்தரவிடக்கோரி எதிருரை தாக்கல் செய்து வாதிடப்பட்டது.

4) இந்த மனுவில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனை யாதெனில் இம்மனு அனுமதிக்கக்கூடியதா? இல்லையா? என்பதைக் காண்பதேயாகும்.

5) இருதரப்பிலும் எவ்வித வாய்மொழி சாட்சியமும், ஆவண சாட்சியமும் தாக்கல் செய்யப்படவில்லை.

6) இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது. அபிடவிட்டு, எதிருரை மற்றும் வழக்கு கோப்பு பரிசீலிக்கப்பட்டது.

7) **<u>தீர்வு</u>**:-

மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் மனுவும் அது குறித்து வாதிடப்பட்டதும் ஏற்புடையதாக உள்ளது. எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டிருக்கம் எதிருரையும் அதுகுறித்து வாதிடப்பட்டதும் இந்த மனுவில் இந்த சூழ்நிலையில் இந்த வழக்கில் ஏற்புடையதாக இல்லை. மனுதாரர் தரப்பில் மனுதாரருக்கு இந்த வழக்கு சம்பந்தமாக கிடைக்கப்பெற்றுள்ள முக்கிய

ஆவணங்களை தனது தரப்பு சான்றாவணமாக குறியீடு செய்வதற்காக அசல் வழக்கினை மறுதிறப்பு செய்ய அனுமதிக்க வேண்டியது அவசியமான ஒன்றாகும். தரப்பினர் ஒருவருக்கு அவரது தரப்பை நிரூபணம் செய்வதற்காக ஆவணங்கள் கிடைக்கும்பட்சத்தில் அதனை குறியீடு செய்வதற்காக முடிக்கப்பட்ட மனுதாரர் தரப்பு சாட்சியத்தை மீண்டும் மறுதிறவு செய்தால் மட்டுமே அவரது தரப்பை நிரூபிக்க முடியும். தவறும்பட்சத்தில் மனுதாரருக்கு கிடைத்துள்ள ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்வதற்கு அவருக்கு ஒரு வாய்ப்பு வழங்க வேண்டியது அவசியமாயும், நியாயமாயும் உள்ளது. மனுதாரரால் அசல் வழக்கினை மறுதிறப்பு செய்து வழக்கினை விசாரணைக்கு ஏற்க உத்தரவிடக்கோரி 06.09.2023 ம் தேதி தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இந்த மனுவினை தள்ளுபடி செய்யும்பட்சத்தில் மனுதாரருக்கு தனது தரப்பை நிரூபணம் செய்ய முடியாமல் போய் ஈடு செய்ய முடியாத இழப்பும், நஷ்டமும் ஏற்படக்கூடும். மேலும், இம்மனுவினை தள்ளுபடி செய்யும்பட்சத்தில் இவ்வழக்கு சம்பந்தமான வேறு வழக்குகளும் எழக்கூடும். மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இம்மனுவினை அனுமதிக்கும்பட்சத்தில் எதிர்மனுதாரர்களுக்கு எவ்வாறு இழப்பு ஏற்படும் என்பது குறித்து எதிருரையில் எதிர்மனுதாரர் குறிப்பிட்டு கூறவில்லை. எனவே, மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இந்த மனுவினை அனுமதிக்க வேண்டியது நீதியின்பால் அவசியமாயும், நியாயமாயும் உள்ளது என இந்த நீதிமன்றம் முடிவு செய்கிறது.

இறுதியாக, இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் மனு, எதிருரை, வாதுரைகள் மற்றும் நீதியின்பால் கொண்ட அக்கறை ஆகியவற்றை கருத்திற்கொண்டு, அசல் வழக்கினை மறுதிறப்பு செய்து வழக்கினை விசாரணைக்கு ஏற்க உத்தரவிடக்கோரி 06.09.2023 ம் தேதி மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இந்த மனுவினை அனுமதித்து இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது. மனுவின் தன்மை கருதி செலவு தொகை யாதுமில்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2024 ம் ஆண்டு மார்ச் திங்கள் 18 ம் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

P ANURADHA Digitally signed by P ANURADHA

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சாத்தூர்.

மனுதாரர்/2 ம் பிரதிவாதி தரப்பு சாட்சி, சான்றாவணங்கள் : இல்லை
எதிர்மனுதாரர்/வாதி தரப்பு சாட்சி, சான்றாவணங்கள் : இல்லை

P ANURADHA Digitally signed by P ANURADHA

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சாத்தூர்.

மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
சாத்தூர்.
இ.ம.எண்.06/2023
உள்
அ.வ.எண்.99/2015
**உத்தரவு**
நாள்– 18.03.2024